# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 376/2024**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 24.11.2025.**

| | |
|---|---|
| **Name : அழகுமுத்து** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2 4 present. ) (Accused 1, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.07.2023 ம் தேதி 20.00 மணிக்கு காவல் நிலைய அலுவலில் இருந்த போது ஜலகண்டாபுரம் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் நான் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த வெங்கடேஷ் வயது 46, த/பெ.செல்வராஜ் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அவருடைய மகன் மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப ஜலகண்டாபுரம் காவல் நிலைய குற்றஎண்.148/2023 ச/பி 294(பி), 323, 324, 341, 506(2) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவம் எப்போது நடந்தது என்றால் மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்ததை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்றால்

ஆமாம். தகவல் கிடைத்த நேரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். வழக்கை பொய்யாக ஜோடிக்க வேண்டி அந்த தகவலை முதல் தகவல் அறிக்கையில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது எத்தனை மணி என்றால் 21.00 மணியாகும். அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவல் பொய் என்றால் சரியல்ல. யார் தகவல் கொடுத்தார்கள் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். வாக்குமூலத்தை நானே எழுதி நானே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தை நான் எழுதினேனா என்றால் என்னுடன் அலுவலில் வந்த போலீசார் எழுதினார். அந்த என்னுடன் வந்த போலீசார் பெயர் என்னவென்றால் நினைவில்லை.

5) நானே சென்று வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் என்னுடன் வந்த காவலர் வாக்குமூலம் எழுதினார். முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன். நீதிமன்றத்திற்கு தவறான தகவல்களை அளிக்கிறேன் என்றால் இல்லை. இந்த வழக்கு பிரச்சனைக்கு மூலக்காரணம் பெண் பிரச்சனை என தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

6) மணிகண்டனுக்கும் வீரமணிக்கும் இடையில் தான் பிரச்சனை என தெரிந்து கொண்டேன் என்றால் தெரிந்து கொண்டேன். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பே இரு சாட்சிகள் முன்னிலையில் வரைபடம் தயார் செய்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் அது ஆய்வாளருக்கு தான் தெரியும்.

7) பார்வை மகஜர் தயார் செய்தது இரவு 07.30 என்றால் ஆய்வாளருக்கு தான் தெரியும். நான் ஆவணத்தை பார்த்த போது இரவு 9 மணி என உள்ளது. பார்வை மகஜர் 7.30 மணிக்கு தான் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வாக்குமூலம் வாங்கும் போது பாதிக்கப்பட்டவர் நல்ல நிலையில் இருந்தாரா என்றால் அவசர

சிகிச்சை பிரிவில் உள்ளே இருந்தார், அதனால் அவர் மகன் வசம் வாக்குமூலம் பெற்றேன்.

8) மருத்துவர் சொன்னதன் மூலமாக மயக்க நிலையில் உள்ளார் என்பதை தெரிந்து தகொண்டேன். வாக்குமூலம் யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் வந்த காவலர் எழுதினார். நானே புகார் தயார் செய்து எதிரிகள் காவல் துறை அத்துமீறலில் பொதுமக்கள் சார்பாக பேசுவதால் காழ்ப்புணர்ச்சி காரணமாக நானே வாக்குமூலம் எழுதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.24 18:40:04 +0530

Judicial Magistrate No.II,
Mettur.